# கிருபை, அன்பு மற்றும் ஐக்கியம்



பாடம் 13 செப்டம்பர் 26, 2026



"கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துவினு
டைய கிருபையும்,
தேவனுடைய
அன்பும், பரிசுத்த
ஆவியினுடைய
ஐக்கியமும்,
உங்கள்
அனைவரோடுங்கூட
இருப்பதாக.
ஆமென்."
(2 கொரிந்தியர் 13:14)

பவுலின் கடிதங்களின் முடிவுரைகளில் காணப்படும் மிகவும் பொதுவான சூத்திரம், அவருடைய 14 நிருபங்களில் 13ல் சிறிய மாறுதல்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது, அதுவே: “கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக” (ரோ. 16:24; 1 கொரி. 16:23; கலா. 6:18; எபே. 6:24; பிலி. 4:23; கொலோ. 4:18; 1 தெச. 5:28; 2 தெச. 3:18; 1 தீமோ. 6:21; 2 தீமோ. 4:22; தீத்து . 3:15 ; பிலே. 1:25; எபி. 13:25).



இருப்பினும், கொரிந்தியருக்கு எழுதின 2வது நிருபத்தில், அவர் ஒரு முக்கியமான விதிவிலக்கைக் குறிப்பிடுகிறார். அவரது விடை பெறும் வாழ்த்தில், தேவத்துவத்தின் மூன்று நபர்களின் - அதாவது பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி ஆகியோரின் - கிருபை, அன்பு மற்றும் ஐக்கியம் ஆகியவை அடங்கியுள்ளன (2 கொரி. 13:14).





“கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை”



“தேவனுடைய அன்பு”



“பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியம்”



“உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக”

# “கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும்”

**“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.” (2 கொரிந்தியர் 8:9)**

பவுல் கொரிந்தியருக்கு எழுதிய தனது 2வது நிருபத்தை, இயேசுவின் கிருபையை குறித்த குறிப்புடன் தொடங்கி நிறைவு செய்கிறார்(2 கொரி. 1:2; 13:14). இந்த கிருபை எதை கொண்டுள்ளது?



நாம் அவருடைய ஐசுவரியத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, அவர் பரலோகத்தின் நித்திய ஐசவரியத்தை விட்டுவிட்டு ஏழையானார் (2 கொரி. 8:9)



நாம் அவரை அறியவும், அவரிடம் அன்பு செலுத்தவும், அவரை பின்பற்றவும் அவர் நம் உலகில் நடந்து சென்றார் (யோவான் 15:12)



நம் பாவங்களை மன்னித்து நமக்கு நித்திய ஜீவனை அளிப்பதற்காக, அவர் நம்மை தாழ்த்தி, மரண பரியந்தம் கீழ்படிந்தவரானார் (பிலிப். 2:8)

அவருடைய கிருபையை பெறும் நமக்கு என்ன நிகழ்கிறது?

- நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோ. 3:24; எபே. 1:7)
- நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம் (ரோ. 5:2)
- கிறிஸ்துவிடமிருந்து வல்லமை பெறுகிறோம் (2 கொரி. 12:9)
- பாவம் நம்மீது ஆளுகை செலுத்தவில்லை (ரோ. 6:14)
- இயேசுவுடன் இணைந்து நாம் வாழ்க்கையில் ஆளுகை செய்வோம் (ரோ. 5:17, 21)



# "தேவனுடைய அன்பு" (1)

"அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்." (1 யோவான் 4:8)



தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று வேதாகமம் உறுதியாக அறிவிக்கிறது(1 யோவான் 4:8). அவர் அந்த அன்பை தம்முடைய படைப்புகள் அனைத்தின் மீதும் பொழிந்திருக்கிறார். நம்முடைய சொந்த இருதயங்களிலும், பெற்றோர்-பிள்ளைகளுக்கு இடையிலான உறவிலும், அழகான மலர்களிலும் இனிமையாக பாடும் பறவைகளிலும் நாம் அதைக் காணலாம்; ...





அன்பு நம்மை கட்டியெழுப்புகிறது (1 கொரி. 8:1) என்றும், அன்பு இல்லாவிட்டால் எதற்கும் மதிப்பில்லை (1 கொரி. 13:1-3) என்றும், எல்லாவற்றையும் தேவனிடமிருந்து வரும் அந்த அன்போடுதான் செய்ய வேண்டும் (1 கொரி. 16:14) என்றும் பவுல் கொரிந்தியர்களுக்கு (மற்றும் நமக்கும்) கற்பிக்கிறார்.

ஆனால், சந்தேகத்திற்கு இடமின்றி, நம்முடைய பாவங்களுக்காக இயேசுவை ஒரு பலியாக ஒப்புகொடுத்ததில் தான் தேவனுடைய அன்பின் மிகச்சிறந்த வெளிப்பாட்டை காணமுடியும் (யோ. 3:16).

தேவன் நம்மிடம் காட்டிய அதே அன்புடன் மற்றவர்களிடம் நடந்துகொள்ள இந்த உதாரணம் நம்மை வழிநடத்துகிறது(1 யோவான் 3:16)

# “தேவனுடைய அன்பு” (2)

“பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.” (2 கொரிந்தியர் 13:11)

பவுல் தேவனை பல பரிமாணங்களில் வெளிப்படுத்துகிறார்:

- “பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன்” (ரோ. 15:5)
- “நம்பிக்கையின் தேவன்” (ரோ. 15:13)
- “சமாதானத்தின் தேவன்” (ரோ. 15:33)
- “[...] இரக்கங்களின் பிதா” (2 கொரி. 1:3பி)
- “சகலவிதமான ஆறுதலின் தேவன்” (2 கொரி. 1:3பி)
- “அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன்” (2 கொரி. 13:11)



பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; (1 யோவான் 3:1)



அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், (எபே. 3:19)



தேவன் இக்குணங்கள் அனைத்தையும் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், இவை அனைத்தும் நம்மை வந்தடைவதற்கான ஊற்றாகவும் அவரே திகழ்கிறார்.

நாம் பார்த்தது போல, தேவன் அன்பாக இருக்கிறார்: ஆனால் அவர் அன்பின் தேவனாகவும் இருக்கிறார்: அதாவது...



நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது (ரோ. 5:5)

# “பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியம்”

“கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.” (2 கொரிந்தியர் 13:14)

அவர்கள் நம்மோடு இருக்க வேண்டும் என்று பவுல் விரும்புகிறார்: ஒரு நபரின் (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) கிருபை; ஒரு நபரின் (பிதா) அன்பு; மற்றும் ஐக்கியம்... ஒரு நபரின் வல்லமை? (2 கொரி. 13:14). கருத்து ஒருமைப்பாட்டிற்காக கூறினால், பவுல் வல்லமையைப் பற்றி அல்ல, மாறாக ஒரு நபரை (பரிசுத்த ஆவியானவர்), பற்றியே பேசுகிறார்.

கொரிந்தியர்களுக்கு எழுதிய நிருபங்களில், பரிசுத்த ஆவியானவரைப் பற்றி 40க்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடும் பவுல், அவரை தனிப்பட்ட பண்புகளை கொண்டவராகவே சித்தரிக்கிறார்:மாறாக, தேவனிடமிருந்து வெளிப்படும் வெறும் ஆற்றலாக அல்ல.



- ஊழியப்பணிக்கு மக்களை ஆயத்தப்படுத்துதல் (1 கொரி. 2:4)
- அவர் தேவனுடைய ஆழமான காரியங்களை வெளிப்படுத்துகிறார் (1 கொரி. 2:10)
- அவர் நமக்கு தேவனுடைய ஆழமான காரியங்களை வெளிப்படுத்துகிறார் (1 கொரி. 2:13)
- அவர் நமக்குள் வசிக்கிறார் (1 கொரி. 3:16)
- நமது நீதிமானாக்கப்படுதலுக்காக கிறிஸ்துவுடன் ஒத்துழைக்கிறார்(1 கொரி. 6:11)
- அவர் ஆவிக்குரிய வரங்களை அருளுகிறார் (1 கொரி. 12:7-11)
- அவர் நம்மை இரட்சிப்பிற்கென்று முத்தரிக்கிறார் (2 கொரி. 1:22)
- நியாயப்பிரமாணத்தை நம் இருதயங்களில் பதிய வைக்கிறார் (2 கொரி. 3:3)
- அவர் கிறிஸ்துவுக்குள் நமக்கு புதிய வாழ்வை அளிக்கிறார் (2 கொரி. 3:6)
- அவர் நமக்கு பாவத்திலிருந்து விடுதலை அளிக்கிறார் (2 கொரி. 3:17)

# “உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக”

“பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.” (1 பேதுரு 1:2)

நாம் திரித்துவத்தை (மூன்று தெய்வீக நபர்கள், ஒரே தேவத்துவம்) இந்த வரிசையில் “பிதா, குமாரன், பரிசுத்த ஆவி” (மத். 28:19) குறிப்பிடுவதற்கு பழகியிருந்தாலும், பவுல் “குமாரன், பிதா, பரிசுத்த ஆவி” (2 கொரி. 13:14) என்று குறிப்பிடுகிறார், பேதுரு “பிதா, பரிசுத்த ஆவி, குமாரன்” (1 பேது. 1:2) என்று குறிப்பிடுகிறார்.



அவர்களுக்கு இடையே எந்தவொரு படிநிலையோ அல்லது ஏற்றத்தாழ்வோ இல்லை: மீட்பின் திட்டத்தில் ஒவ்வொருவரும் வெவ்வேறு பங்கை வகிக்கின்றாரகளே தவிர, அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான பண்புகளையும் நோக்கங்களையும் கொண்டுள்ளனர்.

- **கிருபை**
  - பிதாவிடமிருந்து(1 கொரி. 1:3)
  - குமாரனிடமிருந்து(1 கொரி. 1:3)
  - பரிசுத்த ஆவியானவரிடமிருந்து(எபி. 10:29 )
- **அன்பு**
  - பிதாவிடமிருந்து(1 யோவான் 2:15)
  - குமாரனிடமிருந்து(ரோ. 8:35)
  - பரிசுத்த ஆவியானவரிடமிருந்து(ரோ. 15:30)
- **ஐக்கியம்**
  - பிதாவிடமிருந்து(1 யோவான் 1:3)
  - குமாரனிடமிருந்து(1 யோவான் 1:3)
  - பரிசுத்த ஆவியானவரிடமிருந்து(பிலிப். 2:1)

ஆகவே, முழு இறைத்தன்மையின் கிருபையும் அன்பும் ஐக்கியமும் நம் அனைவரோடும் இருக்கட்டும் என்று வாழ்த்தி பவுல் தனது நிருபத்தை நிறைவு செய்கிறார்(2 கொரி . 13:14)

## எலன் ஜி உவைட் (இவாஞ்சலிசம், பக். 615)

“பிதாவை இவ்வுலகத்திலுள்ளவற்றைக் கொண்டு விவரிக்க முடியாது. பிதாவானவர் தெய்வீகத்தின் முழுநிறைவையும் சரீரப்பிரகாரமாகக் கொண்டிருப்பவர்; மேலும், அவர் மனிதக் கண்களுக்குத் தெரியாதவர்.

குமாரன் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீகத்தின் முழுமையாவார். [...]

கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிச் சென்ற பிறகு அனுப்புவதாக வாக்களித்த 'தேற்றரவாளன்' (ஆறுதல் அளிப்பவர்) என்பவர், தெய்வீகத் தன்மையின் முழுமையையும் கொண்ட ஆவியானவர் ஆவார்; கிறிஸ்துவைத் தங்கள் தனிப்பட்ட இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசிக்கிற அனைவருக்கும் தெய்வீக கிருபையின் வல்லமையை இவர் வெளிப்படுத்துகிறார். பரலோகத் திரித்துவத்தில் மூன்று ஜீவனுள்ள நபர்கள் உள்ளனர்; பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய இந்த மூன்று மகா வல்லமைகளின் பெயரால், உயிருள்ள விசுவாசத்துடன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்; மேலும், கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்க்கையை வாழ முற்படும் பரலோகத்தின் கீழ்ப்படிதலுள்ள மக்களுக்கு இந்த வல்லமைகள் துணைநின்று செயல்படும்.”